# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No.05/2019

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | பி.வாசா.1 |
| பெயர் | : | காளைலிங்கம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் நாள் செவ்வாய் கிழமை 1872ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கின் 2–ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிருபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 08.01.2001 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் வழக்கிடைச் ஆ பட்டியல் சொத்திற்கு நிலஉடமை பதிவேடு திட்ட அலுவலர் ஏற்படுத்திய பட்டா மாறுதல் உத்தரவு – அசல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 13.02.2002 தேதியிட்ட முதல் 12.10.2022 வரை ( 2–ம் பிரதிவாதி ஆ

பட்டியல் சொத்திற்கு செலுத்திய நிலவரி ரசீதுகள் வரிகை –15 – அசல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 20.05.2001 தேதியிட்ட 1–ம் பிரதிவாதியின் தந்தை கோவிந்தன் சர்வே எண்.261/6–ல் வடபுறம் 61 சென்டை 1–ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு கொடை ஆவணம் – சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 05.05.2009 தேதியிட்ட பட்டா எண்.236 தொடர்பான 10(1) கருப்பையா மகன் கோவிந்தன் பெயரிலுள்ள – கணினி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 23.08.2012 தேதியிட்ட 2–ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.1172–ல் வழங்கிய நிலஉரிமை பட்டா – நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 20.02.2014 தேதியிட்ட ஆ பட்டியல் சொத்து சம்பந்தமாக 2–ம் மபிரதிவாதிக்கு வட்டாட்சியர் வழங்கிய விவசாய சான்றிதழ் – அசல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. 01.08.2015 தேதியிட்ட கோவிந்தன் 13.05.2016–ல் இறந்தது தொடர்பான இறப்பு சான்றிதழ் – அசல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. 30.01.2017 தேதியிட்ட பட்டா எண்.236–க்கு கருப்பையா மகன் கோவிந்தன் பெயரில் உள்ள 10(1) – கணினி நகல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
9. 12.12.2024 தேதியிட்ட கோவிந்தன் மற்றும் 2–ம் பிரதிவாதி காளைலிங்கம் பெயரில் உள்ள சாகுபடி அடங்கல் – சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும்

**ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.01.20 15:02:27 +0530